# DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, TIRUPATHUR.

## C.C. No.40/2024.

1. Deposition of Witness for : PW3
2. Name : திருமதி.ந.உமாபாரதி
3. Father's Name :
4. Village :
5. Taluk :
6. Caste :
7. Calling :துணை இயக்குநர் தொழிக பாதுகாப்பு சுகாதாரம், ஒசூர்
8. Religion :
9. Age :

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 18.03.**2024.**

**முதல் விசாரணை:–**

நான் தற்போது ஒசூரில் தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் துணை இயக்குநர் பொறுப்பு வகித்து வருகிறேன். வேலூர் தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் துணை இயக்குநர் பொறுப்பு வகித்த போது திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி தாலுக்கா, கைலாசகிரி ரோடு மேட்டுப்பாளையம் என்ற முகவரியில் ஜே.பி அகர்பர்த்தி என்ற தொழிற்சாலையில் அகர்பர்த்தி தயாரிக்கும் பணி நடைபெற்று வந்தது. மேற்கண்ட முகவரியில் இயங்கும் தொழிற்சாலையில் மோகன்ராஜ், வயது 17, த/பெ. கண்ணன் என்ற தொழிலாளிக்கு விபத்து ஏற்பட்டு மரணம் நிகழ்ந்துள்ளது என ஊடகங்களில் செய்தி

வெளிவந்ததை அடுத்து 01.09.2023 அன்று வேலூர் 2–ம் வட்ட தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் துணை இயக்குநர் ஆகிய நான் மரண விபத்து புலனாய்வு செய்தேன்.

**முரண் 1**

1.தொழிற்சாலைகள் சட்டம் 1948 (திருத்தப்பட்டது 1987) மற்றும் தமிழ்நாடு தொழிற்சாலை விதிகள் 1950 பிரிவு 7–A (1)(2)மற்றும் பிரிவு 21 (1)(iv)(c) மேற்கண்ட தொழிற்சாலையில் 01.09.2023 அன்று மோகன்ராஜ் வயது 17, த/பெ.கண்ணன் என்பவர் காலை சுமார் 9.00 மணியளவில் வேலைக்கு வந்து அகர்பர்த்தி தயாரிப்பு இயந்திரத்திலிருந்து அகர்பர்த்தி உற்பத்தி செய்யும் பணியில் இருந்தார். பின்னர் சுமார் 11.00 மணியளவில் அகர்பர்த்தி செய்வதற்கு மூலப்பொருட்களான கரித்தூள் மற்றும் மரத்தூள் கலவை தீர்ந்து விடவே அதை எடுக்க அகர்பர்த்தி உற்பத்தி இயந்திர அறைக்கு எதிரே இருந்த கலவை இயந்திர அறைக்கு சென்று இயங்கி கொண்டிருந்த கலவை இயந்திரத்தில் இருந்து கரித்தூள் மற்றும் மரத்தூள் கலவையை முறத்தில் வாரி வாளியில் நிரப்பும்போது தகுந்த வேலி அமைக்கப்படாததால் கலவை இயந்திரத்தில் சுழலும் Mixing Blade பொறுத்தப்பட்டிருந்த கூரான இறக்கையில் அவரின் கை மாட்டி உள் இழுக்கப்பட்டு அந்த வேகத்தில் அவரின் தலை மற்றும் வயிற்றுப் பகுதிகளில் அடிபட்டு அலறி கீழே விழுந்துள்ளார். அவரின் அலறல் சத்தம் கேட்டு அங்கு வந்த சக தொழிலாளர்கள் உடனடியாக அவரை வாணியம்பாடி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று சேர்த்தனர். அங்கு அவரை பரிசோதித்த மருத்துவர்கள் அவர் உயிரிழந்துவிட்டதாக தெரிவித்தனர்.

2. இவ்வாறு கலவை இயந்திரத்தின் சுழலும் அரவை Mixing Blade –ளுக்கு தகுந்த வேலி அமைத்து அங்கு பணியாற்றும் தொழிலாளர்களுக்கு ஊறு விளைவிக்காத வண்ணம் பாதுகாப்பாக அமைக்கப்படாததால் விபத்து நிகழ்ந்துள்ளது என்று 01.09.2023

அன்றைய ஆய்வின்போது என்னால் கண்டறியப்பட்டது. இது மேற்கண்ட சட்ட பிரிவு மற்றும் விதிகளின் படி முரணாகும்.

**முரண் 2**

**தொழிற்சாலைகள் சட்டம் 1948 (திருத்தப்பட்டது 1987) மற்றும் தமிழ்நாடு தொழிற்சாலை விதிகள் 1950 பிரிவு 68**

ஒரு தொழிற்சாலையில் 14 வயது நிரம்பிய வளரினம் பருவத்தினர் பணிபுரிய பின்வரும் தகுதி சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும். பிரிவு 69–ன்படி வேலை செய்வதற்கான தகுதி சான்றிதழ் பெற்று மேலாளர் பொறுப்பில் வைத்திருக்க வேண்டும். அந்த தகுதி சான்றிதழ் படிவத்தின் இலக்க எண்ணை அவர்கள் வேலை செய்யும்போது அணிந்திருக்க வேண்டும். ஆனால் மேற்கண்ட கைலாசகிரி ரோடு, மேட்டுப்பாளையம், வாணியம்பாடி தாலுக்கா என்ற முகவரியில் அமைந்துள்ள ஜே.பி அகர்பர்த்தி என்ற நிறுவனத்தில் வேலை செய்து மரணித்த மோகன்ராஜ் வயது 17, த/பெ.கண்ணன் வளரினம் பருவத்தினர் தகுதி சான்றிதழ் பெறப்படவில்லை என்பது 01.09.2023 அன்றைய ஆய்வின்போது என்னால் கண்டறியப்பட்டது. இது மேற்கண்ட சட்டபிரிவு மற்றும் விதிகளின் படி முரணாகும்.

குற்றமுறையீடு தொழிற்சாலைகள் சட்டம் 1948 மற்றும் தமிழ்நாடு தொழிற்சாலைகள் விதிகள் 1950–ன் கீழ் தண்டனை பிரிவு 92 ஆகும்.

கடந்த 01.09.2023 அன்று பிற்பகல் 2.45 மணியளவில் ஆய்வு செய்தபோது காணப்பட்ட முரண்பாடுகளுக்கு என்னால் ஆய்வறிக்கை தயார் செய்யப்பட்டது. தொழிற்சாலை ஆய்வின்போது மேற்பார்வையாளர் உடனிருந்தார். அவரிடம் ஆய்வறிக்கையில் கையொப்பம் வாங்கப்பட்டது. மேற்படி ஆவணம் அ.த.சா.ஆ.1 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. தொழிற்சாலை உரிம படிவம் 2–ன் நகல் படி

தொழிற்சாலையின் உரிமையாளர் திரு.ஜே.பார்த்திபன் வயது 33, த/பெ.ஜெயபால் ஆவார். மேற்படி ஆவணம் அ.த.சா.ஆ.2 ஆகஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. ஆய்வின் போது அங்கு பணியில்இருந்த தொழிலாளர்கள் திரு.நிர்மல் குமார் மற்றும் திரு.பாலாஜி ஆகியோரிடம் மரண விபத்து குறித்து விசாரணை செய்து வாக்குமூலங்கள் பெறப்பட்டன. மேற்படி திரு.நிர்மல் குமார் வாக்குமூலம் அ.த.சா.ஆ.3 மற்றும் திரு.பாலாஜி வாக்குமூலம் அ.த.சா.ஆ.4 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. ஆய்வு மேற்கொண்டதன் அடிப்படையில் என்னால் காணப்பட்ட முரண்பாடுகளுக்கு தொழிற்சாலையின் உரிமையாளருக்கு 07.09.2023 அன்று காரணம் கோரும் அறிவிப்பு ஒப்புதல் அட்டையுடன் அனுப்பப்பட்டது. மேற்படி காரணம் கோரும் அறிவிப்பு அ.த.சா.ஆ.5 மற்றும் ஒப்புதல் அட்டை அ.த.சா.ஆ.6 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. விபத்து நிகழ்ந்தது குறித்து திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடி தாலுக்கா காவல் நிலையத்தில் முதல் தகவல் அறிக்கை குற்ற எண்.384/2023 u/s 174 Cr.P.C. பதிவு செய்யப்பட்டுள்ளது. விபத்தில் மரணமடைந்த தொழிலாளியின் பிரேத பரிசோதனை அறிக்கை பெறப்பட்டன. ஆய்வின்போது விபத்து நடந்த இடத்தின் புகைப்படங்கள் எடுக்கப்பட்டன. விபத்து குறித்த விதம் விபத்துக்கான காரணம், விபத்து தடுப்பு முறைகளுடன் விரிவான புலனாய்வு அறிக்கை சென்னை தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநருக்கு 05.10.2023 அன்று என்னால் அனுப்பப்பட்டது. மேற்படி ஆவணம் அ.த.சா.ஆ.7 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி காரணம் கோரும் அறிவிப்பு கடிதம் அனுப்பப்பட்டு அதை பெற்றுக்கொண்ட தொழிற்சாலை உரிமையாளரிடமிருந்து பதில் கடிதம் 25.10.2023 அன்று இவ்வலுவலகத்தில் பெறப்பட்டது. மேற்படி கடிதம் அ.த.சா.ஆ.8 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. விபத்தில் மரணமடைந்த தொழிலாளரின் குடும்பத்திற்கு உரிமையாளரால் ரூ.5,00,000/– இழப்பீட்டு தொகை வழங்கப்பட்டுள்ளது. தொழிற்சாலை உரிமையாளரிடமிருந்து

பெறப்பட்ட பதில் ஏற்புடையதாக இல்லை. Mixing Machine Blade –களுக்கு பாதுகாப்புவேலி அமைக்கப்படாமல் தொழிலாளியை பணியில் ஈடுபடுத்தப்பட்டு மரண விபத்து ஏற்பட்டதாலும் மற்றும் வளரினம் தொழிலாளியை மருத்துவ தகுதி சான்று இல்லாமல் உற்பத்தி பணியில் ஈடுபடுத்தியதாலும் தொழிற்சாலை உரிமையளர் மீது மேல் நடவடிக்கை தொடரப்போவதாக என்னால் 26.10.2023 அன்று தொழிற்சாலை உரிமையாளருக்கு மேல் நடவடிக்கை கடிதம் அனுப்பி வைக்கப்பட்டது. மேற்படி கடிதம் அ.த.சா.ஆ.9 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. வழக்கு முன்மொழிவு பேராணை என்னால் 26.10.2023 அன்று சென்னை தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் இயக்குநருக்கு அனுப்பப்பட்டது. மேற்படி ஆவணம் அ.த.சா.ஆ.10 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதன் படி மேற்படி அலுவலரிடமிருந்து வழக்கு அனுமதி குறிப்பாணை 03.11.2023 அன்று பிறப்பிக்கப்பட்டு 15.11.2023 அன்று துணை இயக்குநர் அலுவலகத்தில் பெறப்பட்டது. மேற்படி ஆவணம் அ.த.சா.ஆ.11 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. எனவே கீழ்கண்ட குற்றச்சாட்டின் அடிப்படையில் வேலூர் மாண்புமிகு தலைமை குற்றவியல் நடுவர் அவர்கள் முன்னிலையில் 21.11.2023 அன்று குற்ற முறையீடு என்னால் தாக்கல் செய்யப்பட்டது.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

பிற்பகல் 2.45 மணிக்கு நான் சம்பவ இடம் சென்றேன். 01.09.2023 பிறகு நான் பணி மாறுதல் ஆகிவிட்டதால் சம்பவ தொழிற்சாலையை ஆய்வு செய்யவில்லை. இறந்துவிட்ட சிறுவனின் எந்தவிதமான தகுதி சான்றிதழ் உடனான அடையாள அட்டை உடலில் காணப்படவில்லை என்றால் சரிதான். 01.09.2023 அன்று ஆய்வுக்கு சென்றபோது அங்கு எந்த தனிநபரும் இல்லை பாலாஜி மற்றும் நிர்மல்குமார் இருநபர்கள் தான் இருந்தார்கள். இறந்துவிட்டதாக சொல்லப்படக்கூடிய நபர் தொழிற்சாலையில் பணிபுரிந்த பணியாள் என்பதற்கான ஆவணம் ஏதேனும் கைப்பற்றினேனா என்றால்

இல்லை. தொழிற்சாலைகள் சட்ட பிரிவு 2 (l) படி தொழிற்சாலையில் யார்யாரெல்லாம் இருக்கிறார்களோ அவர்கள் அந்த தொழிற்சாலையில் பணிப்புரிகின்ற தொழிலாழியாக கருதப்படவேண்டும். இறந்துவிட்ட தொழிலாளியின் பெயர் மோகன்ராஜ். இறந்துவிட்ட மோகன்ராஜ் தொழிற்சாலையில் எந்த நேரத்திலாவது உயிருடன் இருந்ததை பார்த்தேனா என்றால் இல்லை. மோகன்ராஜ் தொழிற்சாலையில் பணிபுரிந்தார் என்பதற்கான புகைப்படமாவது தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. மோகன்ராஜ் பிறப்பு சான்றிதழை பெற்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. எங்கள் தரப்பில் மோகன்ராஜ் வயது என்ன என்று அறிய ஆவணம் இல்லை என்றால் சரி. நான் ஆய்வு செய்த போது இயந்திரம் சுழலும் இடத்தை சுற்றி பாதுகாப்பு கம்பி வலை போடப்பட்டிருந்தது என்றால் சரியல்ல. சம்பவம் நடைபெற்றதாக காண்பிக்கபடக்கூடிய அறையின் புகைப்படைத்தை நான் சாட்சியமாக குறியீடு செய்யப்படவில்லை என்றால் சரிதான். தொழிற்சாலையில் மேற்பார்வையாளர் விசாரணை செய்ததற்கு அவரிடமிருந்து மேற்பார்வையாளர் என்பதற்கு ஆதாரம் ஏதும் நான் பெறவில்லை என்றால் சரி. எதிரியின் தொழிற்சாலை தொழிற்சாலை சட்டத்தின் படி பதிவு செய்யப்படவில்லை என்பதால் எந்தவிதமான ஆவணமும் எதிரியால் பராமரிக்கப்படவில்லை. அ.த.சா.ஆ.1 முதல் ஆய்வக அறிக்கை நான் தான் தயார் செய்தேன். அ.த.சா.ஆ.2 பார்ம்–2 எதிரி தரப்பில் விபத்துக்கு 20 நாள் கழித்து எங்களிடம் கொடுக்கப்பட்டது. அ.த.சா.ஆ.2 எதிரி தரப்பில் எங்கள் அலுவலகத்திற்கு அளிக்கப்பட்டதற்கு நாங்கள் எதுவும் வழிகாட்டுதல் எதிரிக்கு செய்யவில்லை. அ.த.சா.ஆ.3, 4 வாக்குமூலத்தை நான் தான் எழுதினேன். இறந்த மோகன்ராஜ் தொழிற்சாலைக்கு பக்கத்தில் குடியிருக்கிறார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. இறந்த மோகன்ராஜிக்கு 14 அல்லது 15 வயது தான் அவர் தொழிற்சாலை பக்கத்திற்கு அருகில் இருந்ததால் விளையாட்டுத்தனமாக அத்துமீறி நுழைந்து இயந்திரத்தில் சிக்கிக்கொண்டார் என்று தெரியுமா என்றால் தெரியாது. தனிநபர்

சாட்சிகள் யாரையும் நான் விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. அக்கம்பக்கத்தில் நான் யாரையும் நான் விசாரணை செய்யவில்லை என்றால் எனக்கு தொழிற்சாலை சட்டத்தின் படி எனக்கு அதிகாரம் இல்லை. இறந்துபோன மோகன்ராஜின் தகப்பனாரை நான் விசாரித்து வாக்குமூலம் பெறவில்லை என்றால் தொழிற்சாலை சட்டத்தின் படி எனக்கு அதிகாரம் இல்லை. தொழிற்சாலைக்குள் பணிபுரியும் நபர்களை மட்டும் தான் நான் விசாரித்து வாக்குமூலம் பெற இயலும். அரவை இயந்திரத்திற்கு போதுமான அளவில் பாதுகாப்பிற்கான வேலி அமைக்கப்பட்டிருந்தது என்றும் வழக்கிற்காக தவறுதலாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி மீது வழக்கு தொடருவதற்கு முன்அனுமதி பெறுவதற்கு என்னுடைய கோப்பில் உள்ள ஆவணங்களை மேல் அலுவலருக்கு அனுப்பி முன் அனுமதி பெற்றேன். தொழிலாளியின் வளரினம் பருவத்தினர் என்பதற்கான தகுதி சான்றிதழ் தொழிற்சாலை விதிகளின் படி யார் வைத்திருக்கவேண்டும் என்றால் மேலாளர் வைத்திருக்க வேண்டும். மேலாளர் விசாரித்து தொழிலாளியின் வளரினம் தகுதி சான்று உள்ளதா என விசாரித்து தகுதி சான்றை பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேனா என்றால் இல்லை. எதிரியுடைய தொழிற்சாலை பதிவு செய்யாததால் எதிரி யார் மேலாளர் என பார்ம்–2 என குறிப்பிடாததால் மேலாளரை நான் விசாரணை செய்யவில்லை. 01.09.2023–ல் எதிரி தொழிற்சாலையுடைய மேலாளர் யார் என விசாரித்தேனா என்றால் பதிவு செய்யாத தொழிற்சாலைக்கு உரிமையாளரே நாங்கள் மேலாளராக நாங்கள் கருதுவோம். இறந்துபோன மோகன்ராஜ் தொழிலாளி இல்லை என்பதால் அவர் தொழிலாளி வளரினம் தகுதி சான்று வைத்திருக்கவேண்டிய அவசியம் இல்லை என்பதால் நான் மேலாளரை விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. எந்தவிதமான சட்டவிதி மீறல் எதிரி செய்யவில்லை என்றும் மோகன்ராஜ் இறந்துவிட்டார் என்பதால் எதிரி மீது பொய்யான வழக்கு பதிவு செய்தேன் என்றால் சரியல்ல. 01.09.2023 அன்று எதிரியின் தொழிற்சாலை செயல்படவில்லை என்றால் சரியல்ல. 01.09.2023 எதிரியின் தொழிற்சாலை செயல்பாட்டில் இருந்தது என்பதற்கான எந்த

ஆவணங்களை நான் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. எதிரியின் தொழிற்சாலை பதிவு செய்யப்படாத தொழிற்சாலை என்பதால் எந்தவிதமான ஆவணங்களும் எதிரியால் பராமரிக்கப்படவில்லை. 01.09.2023 அன்றோ அதற்கு முன்போ அந்த தொழிற்சாலை இயங்கப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல.

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

P V SANDILYAN Digitally signed by P V SANDILYAN

Chief Judicial Magistrate,
Tirupathur.